2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

ஜூன் மாத இதழ்

**நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை.**

யோசுவா 1:5



**NO ONE WILL BE ABLE TO STAND AGAINST YOU ALL THE DAYS OF YOUR LIFE**

**JOSHUA 1:5**


Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,



| HMSM | XXVII | JUN |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரூ.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரூ 20 பெட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் 15 வகை ஊழியங்கள்

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

# இந்த மாத வாக்குத்தத்தம்

**நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை. யோசுவா 1:5**

## ஆசிரியரிடமிருந்து...

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த 5 மாதங்கள் கர்த்தர் உங்களை உங்கள் குடும்பத்தை ஆச்சரியமாக நடத்தி வந்திருக்கிறார். இந்த ஆறாவது மாதத்திலும் உங்களை பாதுகாப்பார்; உங்கள் குடும்பத்தை ஆசிர்வதிப்பார்;

உங்களுக்கு விரோதமாக எழும்பப்படும் எந்த ஆயுதங்களும் வாய்க்காதபடி உங்களை பாதுகாப்பார்.

இந்த மாத வாக்குதத்தத்தின் படி நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவரும் உனக்கு விரோதமாக எதிர்த்து நிற்பதில்லை என்ற வசனத்தின்படி எதிர்த்து நிற்கவே முடியாதபடி கர்த்தர் கூட இருந்து நடத்துவார். இந்த மாதத்தில் யோசுவாவோடு இருந்தது போல உங்களோடு தேவன் இருப்பார். யோசுவா கர்த்தருக்கு பிரியமாக, கர்த்தரை பிரியப்படுத்துகிற ஒரு நபராக, மோசேக்கு பணிவிடைகாரனாக இருந்தானோ அதைப்போல நீங்களும் கர்த்தருக்கு பிரியமாய் இருந்து, கர்த்தர் உங்களுக்கு கொடுத்த ஊழியக்காரனுக்கு எல்லாவிதத்திலும் உதவியாக இருந்து தேவ சித்தத்தின் படி குடும்பமாக கர்த்தரை சேவிப்பீர்களானால் இந்த வாக்குத்த்தத்தை உங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றுவார். உங்களை ஆசீர்வதிப்பார். நன்மையான ஈவுகளை தருவார்.



எனக்காக குடும்பத்திற்காக சபைக்காக சபை மக்களுக்காக, ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசிர்வதிப்பார்.**

Rev. Dr. J. Samuel Jebaraj




# வருமானத்தை ஞானத்தோடு சேமிப்போம்

## ஆண்கள் பகுதி

மக்கள் மத்தியில் சேமிக்கும் பழக்கம் படிப்படியாக குறைந்துகொண்டு வருகிறது. கிறிஸ்தவர்களில் அநேகர் தேவன் வருமானத்தைத் தரும்போது ஞானமில்லாமல் செலவழித்துவிட்டு பின்பு கடனில் சிக்கித் தவிக்கிறார்கள். இன்றைய வருமானத்தை இன்றே செலவிட்டு விடாமல் எதிர்காலத் தேவைகளுக்காக எடுத்து வைப்பதே சேமிப்பாகும்.

வாகனம் மற்றும் வீடு பழுதுபார்த்தல், எதிர்பாராத மருத்துவ செலவுகள், திடீரென்று வேலையில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்க குறைந்தது மூன்று மாதம் ஆறு மாத சம்பளத்தை சேமிப்பில் வைப்பது நல்லது. அத்தியாவசியத் தேவைகள், பிள்ளைகளின் மேற்படிப்பு மற்றும் திருமணத்தேவைகள் சந்திக்கப்பட சேமிப்பு அவசியமாகும். வயதான காலத்தில் சொந்தக்காலில் நிற்க இப்போழுதே சேமிக்க ஆரம்பியுங்கள்.

நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தை கற்றுக்கொள். (நீதி 6:6) கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக் காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும்.(நீதி 6:8; நீதி 30:25) என்று சேமிப்பைக் குறித்து வேதம் நமக்கு போதிக்கிறது.

சேமிக்க சரியான திட்டமிடுதல் அவசியம். வரவைவிட செலவைக் குறைப்பதே சேமிப்பின் முதல்படியாகும். சம்பளம் கைக்கு வந்தவுடன் உங்கள் முதல் கனியை கர்த்தருக்குப் பிரித்து வைத்தவுடன், உங்கள் முதல் செலவு சேமிப்புக்காக பிரித்துவைப்பதாக இருக்க வேண்டும். வங்கியில் தொடர்வைப்பு நிதிமூலமாக சேமிக்கலாம். இடையிடையே விட்டுவிடாமல் தொடர்ச்சியாக சேமியுங்கள்.

இலக்கு வைத்து சேமிக்கத் துவங்குங்கள். அடுத்த மூன்று வருடத்தில் ஒரு வாகனம் வாங்க வேண்டும் என்ற இலக்கு வைத்து மாதந்தோறும் அதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை சேமிக்கலாம். எடுத்தவுடன் பெரிய இலக்கு வைத்து அதை எட்டமுடியாமல் சோர்ந்து விடுவதைவிட சிறிய அளவிலிருந்து துவங்குங்கள். உங்கள் மாதாந்திர செலவிலோ அல்லது வீட்டு விழாக்களிலோ நீங்கள் மிச்சம் எடுக்கும் தொகையை செலவிடாமல் அதையும் சேமிப்பில் வையுங்கள். எதிர்பாராமல் வருகின்ற போனஸ், அரியர்ஸ், பிறவெகுமதிகளையும் செலவிட்டாமல் சேமிப்பில் வைக்கப் பழகுங்கள்.

தேவன் தந்த ஆசீர்வாதங்களை உதறித்தள்ளிய ஏசா, பின்நாட்களில் என்னை ஆசிர்வதியும் என்று தன் தகப்பனிடம் மன்றாடியும் முழுமையான ஆசீர்வாதத்தைப் பெறவில்லை. எனவே தேவன் நல்ல வருமானத்தைத் தரும்போது இஷ்டம்போல செலவழித்துவிட்டு, வயதான நாட்களில் கஷ்டப்படுவதைவிட, உங்களுக்குப் பெலன் இருக்கும் இந்த நாளிலிருந்தே சிறுக சிறுக சேமிக்கத்துவங்குங்கள். எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளுங்கள்.

## புருஷர் ஐக்கிய கூட்டம்

**திங்கட்கிழமை தோறும்**
**இரவு 8.00 –8.45 மணி வரை**

**இணைந்து ஜெபிக்க யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்..**

பெண்கள் பகுதி

# காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்

Mrs. பெர்சியாள் ஜெபராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா! கர்த்தர் நல்லவர். அவரே நம் காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். பலவிதமான தடைகள், இடையூறுகள் உங்கள் வாழ்வில், குடும்பத்தில் காணப்படுகிறதோ? எதை எடுத்தாலும் தோல்வி என துவண்டுபோனீர்களோ? ஜெயத்தை, நன்மைகளை காண முடியாமல் போராடிக் கொண்டிருக்கிறீர்களோ? வேதம் சொல்கிறது உன் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். எப்படி எனப் பார்ப்போம்.

## 1) தூதனை அனுப்புவார்: ஆதி 24:40

அவர்; நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப் பண்ணுவார். ஆபிரகாம் தன் மகனாகிய ஈசாக்கு பெண் கொள்ள எலியேசரை அனுப்பும் போது சொன்ன வார்த்தை இது. ஆபிரகாம் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்தவன். போன இடமெல்லாம் பலிபீடம் கட்டிக் கர்த்தரைத் தொழுது கொண்டவன். கர்த்தருடைய வழிநடத்துதல் படி பிரயாணப்பட்டவன். கர்த்தருடைய சித்தத்தின்படியே காரியங்களைச் செய்தவன். ஆபிரகாமுடைய ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தரே முன் சென்று நடத்தினார். ஆகவே தான் விசுவாசித்த, வழிப்பட்ட கர்த்தர் தன் காரியத்தை வாய்க்கப் பண்ண உனக்கு முன் தூதனை அனுப்புவார் என்றான். அப்படியே கர்த்தர் காரியத்தை வாய்க்கப் பண்ணினதினால் ஈசாக்கு தன் தாய்க்காக கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான். பெண்களே!உங்கள் வாழ்விலும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடு, கீழ்ப்படிதலோடு, அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற பிரயாசப்படும் போது, உங்கள் காரியத்தை வாய்க்கப்பண்ண தூதனை அனுப்பி செய்து முடிப்பார். ஆறுதல் அடைவீர்கள்.

## 2) கர்த்தர் கூட இருப்பார்: ஆதி 39:3,4

கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும் அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும் அவன் எஜமான் கண்டு, யோசேப்பினிடத்தில் தயவு வைத்து, நாம் கர்த்தரோடிருந்தால், கர்த்தர் நம்மோடிருப்பார். நாம் அவரைத் தேடினால் அவர் நமக்கு வெளிப்படுவார். ஆகவே பெண்களே! ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வேதம் வாசிக்க, தவறாமல் ஆலயம் செல்ல மறவாதிருங்கள். தேவ ராஜ்ஜியத்தின் காரியத்தை வாய்க்கப்பண்ண கர்த்தர் நம் கூடவே இருந்து மனுஷர் (அதிகாரிகள்) கண்களில் தயவு கிடைக்கச் செய்வார்.

பெண்கள் ஆராதனை

செவ்வாய் தோறும் காலை
10:00 -11:30
மணி வரை நமது சபையில்
வைத்து நடைபெறுகிறது.



LIVE STREAMING

# இன்ஸ்டாகிராமா? அல்லது அரை-குறை ஆபாசமா?

பொறுப்பு: Pr. காலேப் ராபர்ட்
உதவி: Bro. பிலிப்

இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாலிபர் ஐக்கியத்தின் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் மிக முக்கியமான ஒரு காரியத்தை நாம் பார்க்கப்போகிறோம்.

The Economic Time என்ற பத்திரிக்கையில் report செய்யப்பட்ட ஒருசெய்தியில் இவ்வாறு சொல்லப்படுள்ளது - ""SENSITIVE CONTENT (பார்க்க விருப்பமில்லாத/ NOT INTERESTED REELS ) OFF செய்தவர்களுக்கும் குழந்தைகள் பார்க்கும் ரீல்ச்-இன் நடுவிலும் கூட ஆபாசமான காரியங்கள் ஊடுருவி வருகிறது என்று".
முன்பை விட இப்பொழுது இன்ஸ்டக்ரம் இல் அரைகுறையாக ஆடும், இச்சையாக பேசும் நபர்களின் வீடியோக்கள் வெகுவாக உயர்ந்துள்ளது. நீங்க அதை OFF பண்ணாலும் அது போகாது.

## அவனுக்கு பணம் முக்கியமா?

நீங்க முக்கியமா?வெளிய நியூஸ்'கு - 'நாங்க அது எல்லாம் சரி பண்ணிட்டு இருக்கோம்'னு சொல்லுவாங்க, ஆனா சரி பண்ண மாட்டாங்க ஏன் என்றால், பிசாசுக்குள்/உலகத்துக்குள் இருக்கும் அவனுக்கு பணம் தான் முக்கியம். நீங்க என்னடானா நான் இச்சையில் விழாமல் இருந்துருவேன்னு உங்களையும் ஊரையும் ஏமாத்திட்டு சுத்துறீங்க.

## அரைகுறை DRESS

போட்டுட்டு PHOTO, VIDEO போட்டால் மத்தவங்க பார்ப்பாங்கனு தெரிஞ்சே பண்ணுற நபர்கள் இப்போ ஈசல் மாதிரி இன்ஸ்டக்ரம் - இல் உண்டு. எப்போவாச்சு தான் அப்படி அவங்க பண்ணுவாங்க, மத்தபடி ஒன்னும் பிரச்சனை இல்லைனு நெனைக்குறதுநால தான் இப்போவர இச்சையை ஜெயிக்க முடியாம இருக்குறீங்க.எழுதி வைத்துக்கொள்ளுங்கள்-'உங்களால் CONTROL ஆக இருக்க முடியாது'யோசேப்பு. ஓடியது போல பாவத்திற்கு/இச்சைக்கு விலகி ஓடினால் மட்டுமே அது சாத்தியம். இச்சை மிக மோசமானது. ஒரு நொடி நீங்க இடம் கொடுத்தாலும் அன்றைக்கு நாளையே தின்றுவிடும்.தேவனுக்குள் இல்லாத உலக ஆட்களை FOLLOW பண்ணிட்டு இருந்தா இன்ஸ்டக்ரம் அரைகுறை ஆபாசம் தான் காட்டும். அதுக்கு யாரு,எதை,எவ்வளவு நேரம் பாக்குற, எவ்வளவு பணம் வரும்-அதான் தெரியும். உங்கள் கண்களின் இச்சையை தூண்டி பாவத்தில் விழ வைக்க 24 மணி நேரமும் அங்க CONTENT இருக்கு. பொழச்சுக்கங்க!

நீதிமொழிகள்6:25 நினைவில் கொள்ளுங்கள். இது பசங்களுக்கு எழுதிய வசனம்னு பெண் பிள்ளைகள் நீங்க படிக்காம விட்ராதீங்க, இது இரு பாலருக்கும் பொருந்தும். 2 தீமோத்தேயு2:22-இல் சொல்லியிருக்கிறபடி பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு விலகியோடினால் தப்பித்துக்கொள்வீர்கள்.இல்லனா கஷ்டம்.

GOD BLESS YOU...

# வழி காண்பித்த தேவன்

பொறுப்பு:
Mrs. லீலிதனராஜ்

## அன்பான சிறுபிள்ளைகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்

விக்டர் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றதை அறிந்ததுமே வெற்றிக் களிப்புடன் பள்ளியிலிருந்து வீட்டை நோக்கி வேகமாக ஓடினான். சீக்கிரமாக வீடு வந்தடைந்த விக்டர் தான் தேர்ச்சி பெற்றதை அப்பாவிற்கு தெரிவித்தான். அப்பா அந்த செய்தியில் கவனம் செலுத்தி மெச்சிக்கொள்ளாமல் “விக்டர், விவசாயம் செய்து கடன் வாங்கி உனது அண்ணனை படிக்க வைத்தேன். உன்னை என்னால் படிக்க வைக்க முடியாது” என்றார்.



விக்டர் மனம் உடைந்து, வேதனையோடு அழ ஆரம்பித்தான். அவனுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் அன்று இரவு “ இயேசப்பா, எனக்கு படிக்கனும் என்று ஆசையாக இருக்கு, ஆனா எங்க அப்பாவால என்னைய படிக்க வைக்க முடியல. எனக்கு உதவி செய்யுங்க” என்று ஜெபித்தான். கர்த்தர் அவன் ஜெபத்தைக் கேட்டார். மறுநாள் காலையில் பள்ளியின் தலைமையாசிரியர் அவனை அழைத்தார். உயர்கல்வி படிப்பதற்கு உதவி செய்ய 3 மாணவர்களை தேர்வு செய்தோம். அதில் நீயும் ஒருவன் என்றார். ஆனந்தத்துடன் வீட்டிற்கு திரும்பி வந்தான். கர்த்தர் செய்த அற்புதத்தை எண்ணி குடும்பமாக கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

படித்து முடித்ததும் அவனுக்கு அரசாங்க வேலை கிடைத்தது. வேலை செய்யும் இடங்களில் இயேசு தன்னை படிக்க வைத்து, உயர்த்தி நன்மை செய்தார் என்று தனது சாட்சியை கூறி அநேகரை இயேசுவிடம் வழி நடத்தினான்.திருமணத்திற்கு பிறகு குடும்பமாக கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஆரம்பித்தார்கள். கர்த்தர் அவனுக்கு பதவி உயர்வை அளித்து அவனை மேன்மைபடுத்தினார்.

அன்பான சிறுபிள்ளைகளே! எதிர்காலத்தைக் குறித்து என்ன படிப்பது? எங்கு படிப்பது? என்பது பற்றி கலங்கியிருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். ஜெபத்திலே விக்டர் ஆசிர்வதிக்கப்பட்டது போல நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாயிரு. அவரே உன் காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். ஆமென்...

**மனப்பாட வசனம்: கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது. சங்கீதம் 34:10**

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

**CHILDREN'S TIME**
வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

**நமது சபை தாங்கும் 38 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.**

**மாதம் தேவை: ரூ.1,94,100** **பொறுப்பு: Bro. அர்னால்டு**


**Pr. Daniel Babu**
Gujarath


**Pr. Stephen Rathod**
Rajasthan


**Pr. Mandeep kidhay**
Moga


**Pr. Chaman Masih**
Ablowal


**Pr. Binu Vijayan**
Tripuri


**Pr. SawarGill**
Gurdaspur


**Pr. Peter Masig**
Taran Taram


**Pr. Sandeep Singh**
Chunnai Kalan


**Pr. Inderjit Singh**
Mohali


**Pr. Prasenjit Basumatary**
Assam


**Pr. Karthick**
Chandigarh


**Pr. Gurdial Singh**
Dehriwal Droga


**Pr. Rajkumar**
Kurali


**Pr. Rajesh**
Mahatpur


**Pr. Simson**
Karnataka


**Pr. Happy Masih**
Sarspur


**Pr. Jirma Lal**
Bazara


**Pr. Caleb**
Delhi


**Pr. Heral Kaddara**
Rajasthan


**Pr. Arionp Kumar**
Ajimar


**Bro.Sam Guna Seelan**
Sharing Love Mission


**Pr. Kamal Deep**
Punjab


**Pr. Godson Joy**
Punjab


**Pr. Harjeet Kaur**
Nawashar


**Pr. Jaswinder Kumar**
Delhi


**Pr. Pritam Singh**
Rajasthan


**Pr. Sonu**
Makhu


**Pr. Patras Masih**
Feruyzepur


**Pr.Dhananjay Nokman**
Assam


**Pr. Jinod Rabha**
Assam


**Bro. Prakash**
Shalom Charity Trust


**Sis. Sugantha**
Shalom Charity Trust


**Bro. Joshua Bhuriya**
Shalom Charity Trust


**Sis. Karuna K. Damor**
Madhya Pradhesh

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

**எங்களது வங்கி கணக்கு எண்:**

**Name** : Assembly of God Church, Pudukottai.
**Bank** : TMB
**A/c No.** : 035100050313093
**IFSC Code** : TMBL0000035
**Branch** : Pudukottai, Tuticorin.

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. வேதமுத்து, Sis. கவிதா | 16 |
| 02 | Bro. தனராஜ், Sis. எஸ்தர் | 18 |
| 03 | Bro. அற்புதராஜ், Bro. யாக்கோபு | 19 |
| 04 | Pr. ராஜன், Sis. கோயில் செல்வி | 24 |
| 05 | Bro. ரூபன், Sis. பேன்சி | 16 |
| 06 | Bro. சாமுவேல் பீட்டர், Bro. பால் | 14 |
| 07 | Sis. ஜெயா , Sis.அமுதா | 11 |
| 08 | Sis. மேரி செல்வி, Sis. தேன்மொழி | 15 |
| 09 | Sis. வசந்தா , Sis. காஞ்சனா | 16 |
| 10 | Sis. சாராள் ஜெயராணி, Bro. சதீஷ் | 12 |
| 11 | Sis. பொன்செல்வி, Bro. அலைக்ஸ் | 19 |
| 12 | Bro. ஜெபஞான குணசிங், Bro. இம்மானுவேல் | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள QR Code ஐ Scan செய்யவும்.**

# சாட்சிகள்

● கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம், நான் பொது வருங்கால வைப்பு நிதி பணத்திற்காக விண்ணப்பித்திருந்தேன். இரண்டு வருடமாக அந்த பில் மேல் அதிகாரிகளால் கையெழுத்து இடப்படாமல் இருந்து வந்தது. நாங்கள் குடும்பமாக பொருத்தனையோடு ஜெபித்தோம். அற்புதமாக கர்த்தர் அனைத்து அதிகாரிகளும் கையெழுத்திட கிருபை செய்தார். உடனடியாக அந்த பணமும் கையில் கிடைக்க உதவி செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்...

-Sis. பாப்பா , நடுக்கூட்டுடங்காடு

---

● தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக, மே மாதம் முதலாம் நாளன்று நாங்கள் ஆற்றிற்கு குளிக்க சென்றோம். குளித்து விட்டு கிளம்பின பின்பு தான் நான் என் கழுத்தை பார்த்தேன். கழுத்தில் போட்டிருந்த 2.5 பவுன் தங்க செயின் காணவில்லை. திரும்ப போய் தேடிப்பார்த்தேன். ஆனால் கிடக்கவில்லை. இனி கிடைக்காது என்று நினைத்தபோது அங்கு குளித்து கொண்டிருந்த சிறுவன் என் செயினை எடுத்து கொடுத்தான். அற்புதமாக செயினை கிடைக்க செய்த தேவனுக்கு கோடான கோடி நன்றி.

-Sis. ஜெய மேரி, புதுக்கோட்டை

---

● நட்டாத்தி அருகில் ஒரு இடம் வாங்க வேண்டும் என்று பிரயாசப்பட்டு கொண்டிருந்தோம். ஆனால் வாங்க போதிய பணம் இல்லாதிருந்தது. கர்த்தரிடத்தில் குடும்பமாக சேர்ந்து ஜெபித்தோம். தேவன் வாக்குதத்தங்களை கொடுத்து எங்களை தேற்றினார்."கர்த்தர் உனக்கு முன்பாக சென்று கோணலானவைகளை செவ்வையாக்குவார்" என்று பேசினார். அதுபோலவே மார்ச் மாதம் இடம் முடிக்க கிருபை செய்தார்.தேவனுக்கு ஸ்தோத்திரம்...

- Sis. புஷ்பா மெர்லின், தூத்துக்குடி

---

● என்னுடைய அக்காவுக்கு முதல் தடவை pregnant ஆக இருக்கும் போது abortion ஆகிடுச்சி. இப்போழுது மறுபடியும் pregnant ஆக இருக்கிறாள். ஊருக்கு பஸ்ஸில் சென்றோம். அப்போழுது பஸ் ரொம்ப குலுங்கியது. அவள் மிகவும் பயந்தாள்.Hospital இல் செக் பண்ணும் போது இதயத்துடிப்பு குறைந்துள்ளதாக கூறினார்கள். நாங்கள் இயேசப்பா குழந்தைக்கு எந்த ஆபத்தும் வரக் கூடாது என ஜெபித்தோம். இதயத்துடிப்பு normal ஆனது. தேவன் குழந்தையை பாதுகாத்தார். தேவனுக்கு கோடான கோடி நன்றி.

-Sis. சுபா


A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00-12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/- மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 9345712349 விண்ணப்ப படிவம் QR Code இல் இணைக்கப்பட்டுள்ளது.





அமாவாசை ஜெபம்

23 ஜூன் திங்கள்

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்: கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்: இரவு 10.00-12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. சாந்தா

**ஜீன் மாதம்- 2025**
**மத்தேயு எழுதின சுவிசேஷம்**
**அதிகாரம் 15 முதல் 28 வரை**
**(வசன இருப்பிடம் எழுதவும்)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | | |
| | 3 | | | | 4 | |
| 5 | | 6 | | | | |
| 7 | | | | | 8 | 9 |
| 10 | | | 11 | | | 12 |
| | | | | | 13 | |
| | 14 | | | | | 15 |

**வலமிருந்து இடம்**

01) யார் ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார் என்றார்?
04) எது இல்லாதபடி வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள் என்றார்?
08) இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன் என்றது யார்?
13) அக்கிரமம் மிகுதியாவதினால் எது தணிந்துபோம்?
15) உயிர்த்தெழுதலில் அவர்கள் பரலோகத்திலே யாரைப்போல் இருப்பார்கள்?

**இடமிருந்து வலம்**

02) இயேசு யாரைப் பார்த்து மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்?
03) ஆயக்காரரும் வேசிகளுமோ யாரை விசுவாசித்தார்கள் என்று கூறினார்?
06) தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே கொலை செய்யப்பட்டது யார்?
07) அப்பொழுது ராஜா எந்தப் பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்றார்?
11) மனுஷகுமாரனும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய எதைக் கொடுக்கவும் வந்தார்?

**மேலிருந்து கீழ்**

03) எந்த தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் கொடுக்கப்படுவதில்லை என்றார்?
06) இயேசு யாரை வாயடைத்தார் என்று பரிசேயர் கேள்விப்பட்டார்கள்?
10) பிரதான ஆசாரியனாகிய யாரிடத்திற்கு இயேசுவைக் கொண்டு போனார்கள்?
12) மீனின் வாயிலே எத்தனை வெள்ளிப் பணத்தைக் காண்பாய் என்றார்?

**கீழிருந்து மேல்**

05) யார் அவரை ஆண்டவர் என்று சொல்லிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்?
09) எத்தனை சீஷர்களும் இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள்?
14) இயேசுவின் சிலுவையை சுமக்கும்படி எந்த ஊரைச் சேர்ந்தவனை பலவந்தம் பண்ணினார்கள்?

**20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்**

பரிசு பெறும் 5 நபர்கள்:

1. Sis. சீபா ராணி, உடுமலைபேட்டை
2. Sis. பொன்னம்மாள், திம்மையார்காலனி
3. Sis. பிரேமா மோகன், வல்லநாடு
4. Sis. வசந்தா சேகர், செந்தியம்பலம்
5. Sis. ரெபேக்காள், நியூ சுந்தர் நகர், கோரம்பள்ளம்

## எங்களது வங்கி கணக்கு எண்:

**இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,**

Name : J. Samuel Jebaraj
Bank : ICICI - Bank
A/c No. : 613901506045
IFC Code : ICIC 0006139
Branch : Tuticorin

UPI ID:
prjsjebaraj@okaxis

## இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:

02.06.2025 – திங்கட்கிழமை
**போதகர்கள் ஐக்கிய கூடுகை - திருநெல்வேலி**

03,04.06.2025 – செவ்வாய், புதன்
**சென்னை**

10,11.06.2025 – செவ்வாய், புதன்
**போதகர்கள் மாநாடு- பெங்களூர்**

15.06.2025 – ஞாயிற்றுக்கிழமை
**மண்டல ஆண்கள் முகாம்-திருநெல்வேலி**

17.06.2025 – செவ்வாய்
**ஊழியர்கள் உபவாச கூடுகை- பாளை**

17.06.2025 – செவ்வாய்
**முழு இரவு ஜெபம்- தூத்துக்குடி**

18,19.06.2025–புதன், வியாழன்
**ஊழியர்கள் ஐக்கிய கூடுகை- திருச்சி**

23.06.2025–திங்கட்கிழமை
**அமாவாசை ஜெபம்- பிரையர் பார்க்**

25,26.06.2025– புதன்,வியாழன்
**இளம் ஊழியர்கள் முகாம்- கடலூர்**

29.06.2025–ஞாயிற்றுக்கிழமை
**மிஷன் கன்வென்ஷன்- வள்ளியூர்**

## ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 - வது ஆராதனை - காலை 06:00-07:30

2 - வது ஆராதனை - காலை 08:30-10:00

3 - வது ஆராதனை - காலை 11:00-12:30

4 - வது ஆராதனை - மாலை 05:00-06:00 ஹிந்தி

5 - வது ஆராதனை - மாலை 06.30-08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 - 12:30

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 - 11:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 - 6:40

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 - 12:30

வேதமே வெளிச்சம் (Zoom meeting) வியாழன் தோறும் இரவு 8.00 மணிக்கு
MEETING ID: 337 022 2215, PASSCODE: 1234

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**




எங்கள் முகவரி:

**Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்**

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in

holymountainag@gmail.com

+91 98421 71014, +91 6369097825

+91 93457 12349

ABOUT US

SCAN ME

To ..........................................................................................

..........................................................................................

..........................................................................................